විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS

මාලිගාවත්ත ලේකම් කාර්යාලය, මාලිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10. Maligawatte Secretariat, Maligawatte, Colombo 10.

අංකය / இல. / No. ஓய்வூ/சுற்றுநிருபம்/2012 දිනය / திகதி / Date 24-05-2012

ஓய்வூதியச் சுற்றுநிருபம்: 03/2012

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்/பிரதேச செயலாளர்கள்,

**ஓய்வூதிய இலக்கங்களை வெளியிடுதல்.**

ஓய்வூதிய இலக்கங்களை வெளியிடுகையில் குறித்த இலட்சத் தொகுதிகள் தீர்மானிக்கப்படுவது அரச நிர்வாகச் சம்பள மாற்றச் சுற்றுநிருபங்களுக்கு அமையவாகும். அதன்படி 25-04-2006ஆந் திகதி கொண்ட அரச நிர்வாகச் சுற்றுநிருபம் 06/2006 இன் அடிப்படையில், என்னால் 23-05-2006 ஆந் திகதி கொண்ட ஓய்வூதியத் திணைக்களச் சுற்றுநிருபம் 05/2006 இன் மூலம் 11 ஆம் இலட்சத் தொகுதியின் கீழான ஓய்வூதிய இலக்கங்கள் வெளியிடப்பட்டன.

அதன் படி 02-01-2006ஆந் திகதி முதல் சிவில் மற்றும் நீதித்துறை அதிகாரிகளின் பண்முகப்படுத்தப்பட்ட ஓய்வு பெறச் செய்தல்களின் போது ("அ" மாதிரிப்படிவம்) 1,110,001 இலிருந்து ஆரம்பமாகி 1,199,999 வரையிலான ஓய்வூதிய இலக்கங்களை வழங்கலானது தற்பொழுது நிறைவடைந்துள்ளது. அதன் காரணமாக அரச நிர்வாக சம்பள மாற்றமொன்று வரமுன்னர் 11 ஆம் இலட்சத் தொகுதியின் கீழான இலக்கங்களைப் பெற்றுக் கொடுத்தல் முடிவுற்றதன் காரணமாக 12 ஆம் இலட்சத் தொகுதியின் கீழ், அதாவது 1,200,000 தொடக்கமான ஓய்வூதிய இலக்கங்களைப் பெற்றுக் கொடுத்தல் 15-05-2012 ஆந் திகதி முதல் செயற்படுத்தப்படுகின்றது என்பதனை அறியத் தருகின்றேன்.

02-01-2006 ஆந் திகதி தொடக்கம் சிவில் மற்றும் நீதித்துறை அதிகாரிகளின் பண்முகப்படுத்தப்படாத ஓய்வு பெறச் செய்தல்களின் போது (பொது 55 மாதிரிப்படிவம்) 1,100,001 தொடக்கம் முன்னோக்கி வழங்கப்பட்ட இலக்கத் தொகுதி தொடர்ந்தும் அவ்வாறே செயற்படுத்தப்படுகின்றது என்பதனையும் தயவுடன் அறியத் தருகின்றேன்.

கே.ஏ. திலகரத்ன,
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.

பிரதிகள்
01. சனாதிபதி செயலாளர்.
02. பிரதமரின் செயலாளர்.
03. செயலாளர் - அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு.
04. கணக்காய்வாளர் நாயகம்.


| | Telephone | Fax | | Telephone | Fax | | Telephone |
|---|---|---|---|---|---|---|---|
| Director General | 2431647 | 2342078 | W&OP | 2332346 | 2432214 | Policy | 2329580 |
| Director | 2432008 | 2342078 | PSPF | 2324375 | 2332347 | Forces | 2320439 |
| Director (F) | 2434974 | 2391403 | L.G.U. | 2342525 | 2342525 | Computation | 2434414 |
| Internal Auditor | 2329634 | 2329634 | Registration | 2329178 | - | Payments | 2431612 |

E-mail: pensions@sltnet.lk
Web site: www.pensions.gov.lk